# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
## Spl.Sessions Case No.13/2022

அ.சா.4

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | நாகேஷ் | Caste: | |
| Father's Name: | பாலுச்சாமி | Calling: | ரிப்போர்ட்டர் |
| Village: | புதுநகர், எமனேஷ்வரம் | Religion: | |
| Taluk: | பரமக்குடி | Age: | 35 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 15.09.2025

( 1,2 எதிரிகள் ஆஜர். 3ம் எதிரி ஆஜர் இல்லை .BNSS பிரிவு 355-ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.)

**முதன்மை விசாரணை**

நான் பரமக்குடி தாலுகா எமனேஸ்வரத்தில் உள்ள புதுநகரில் வசித்து வருகிறேன். தினவேல் பத்திரிக்கையில் ரிப்போர்ட்டராக இருந்து வருகிறேன். சாட்சி புகழேந்தியை தெரியாது. அ.சா.1 நாகராஜனை தெரியாது. அவர் கொடுத்த புகார் சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.3** அந்த கையெழுத்தை எதற்காக எங்கு வைத்து எப்போது போட்டேன் என்றால் மூன்று வருடங்களுக்கு முன்பு காவல்நிலையத்தில் வைத்து சார்பு ஆய்வாளர் சரவணகுமார் கேட்டு போட்டேன். இதுசம்பந்தமாக டிஎஸ்பி என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-**

போலிஸ் விசாரணையில் கடந்த 22.06.2021ம் தேதி மாலை 3.00 மணியளவில் புதுநகரை சேர்ந்த துரைச்சிங்கம் மகன் புகழேந்தி என்பவரும் நானும் தேவேந்திர பாண்டியன் வீட்டு வழியாக வந்துகொண்டிருந்தபோது பரமக்குடி காவல்துணைக் கண்காணிப்பாளர் அவர்கள் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தார் என்றும் அதில் நானும் புகழேந்தியும் கையெழுத்து செய்தோம் என்று 22.06.2021ம் தேதி டிஎஸ்பி விசாரிக்கும்போது கூறிவிட்டு எதிரிகள் எனது சாதிக்காரர்கள் என்பதால் வெள்ளை பேப்பரில் கையெழுத்து போட்டதாகவும், புகழேந்தியை தெரியாது என்றும், டிஎஸ்பி என்னை விசாரிக்கவில்லை என்றும் உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

இல்லை

Sd/- C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.13/2022**

அ.சா.5

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | புகழேந்தி | Caste: | |
| Father's Name: | துரைசிங்கம் | Calling: | ஒப்பந்த தொழில் |
| Village: | தாளையடிகோட்டை | Religion: | |
| Taluk: | பரமக்குடி | Age: | 26 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 15.09.2025

( 1,2 எதிரிகள் ஆஜர். 3ம் எதிரி ஆஜர் இல்லை .BNSS பிரிவு 355-ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.)

**முதன்மை விசாரணை**

நான் பரமக்குடி தாலுகா தாளையடி கிராமத்தில் வசித்து வருகிறேன். ஒப்பந்த தொழில் செய்து வருகிறேன். சாட்சி நாகேஷை தெரியாது. அ.சா.1 நாகராஜனை தெரியாது. அவர் கொடுத்த புகார் சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.4.** அந்த கையெழுத்தை எதற்காக எங்கு வைத்து எப்போது போட்டேன் என்றால் இரண்டு வருடங்களுக்கு முன்பு காவல்நிலையத்தில் வைத்து சார்பு ஆய்வாளர் சரவணன் எனக்கு உறவுக்காரர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க போட்டேன். இதுசம்பந்தமாக டிஎஸ்பி என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-**

போலிஸ் விசாரணையில் கடந்த 22.06.2021ம் தேதி மாலை 3.00 மணியளவில் புதுநகரை சேர்ந்த பாலுச்சாமி மகன் நாகேஷ் என்பவரும் நானும் தேவேந்திர பாண்டியன் வீட்டு வழியாக வந்துகொண்டிருந்தபோது பரமக்குடி காவல்துணைக் கண்காணிப்பாளர் அவர்கள் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தார் என்றும் அதில் நானும் புகழேந்தியும் கையெழுத்து செய்தோம் என்று 22.06.2021ம் தேதி டிஎஸ்பி விசாரிக்கும்போது கூறிவிட்டு எதிரிகள் எனது சாதிக்காரர்கள் என்பதால் வெள்ளை பேப்பரில் கையெழுத்து போட்டதாகவும், புகழேந்தியை தெரியாது என்றும், டிஎஸ்பி என்னை விசாரிக்கவில்லை என்றும் உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

இல்லை

Sd/- C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)